திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, இத்தகைய பால் பவுடர் தொழிற்சாலை ஒன்று ஏற்கெனவே வடாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதே, அதை எப்போது ஆரம்பிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அப்படி அறிவித்ததாக எனக்கு நினைவு இல்லை.

தஞ்சையில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் மற்றும் உள் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம்.

246—(*வினா எண். 16639)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் நவீன வசதிகளுடன் கூடிய திறந்த வெளி விளையாட்டு அரங்கம் மற்றும் மேல் கூரையுடன் கூடிய கட்டிடம் (Indoor Stadium) கட்ட அரசு ஏதேனும் ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) திறந்தவெளி விளையாட்டு அரங்கம் ரூ.4.50 இலட்சம் மதிப்பீடு, உள் விளையாட்டு அரங்கம் ரூ. 14.22 இலட்சம் மதிப்பீடு, நிர்வாகக் கட்டிடம் ரூ. 6.50 இலட்சம் மதிப்பீடு.

(இ) முதல் கட்ட வேலையாக மேற்கூரையுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டு அரங்கம் கட்ட ரூ. 11.30 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

வீரமங்கலம் உயர் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் திட்டம்.

247—(*வினா எண். 18289)—திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டுத் தொகுதியில் வீரமங்கலம் உயர்தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

1984 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இக் கோரிக்கையை அரசு ஆராய்ந்து 1983-84 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி வழங்கப்படவில்லை.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு ஆண்டுதோறும் அரசால் வழங்கப்படும் மானியத்தொகை.

248—(*வினா எண். 19855)—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை—காமராசர் பல்கலைக் கழகத்திற்கு அரசு ஆண்டுதோறும் வழங்கும் மொத்த மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும் வழங்கப்படும் இத்தகைய நிதி உதவிகளில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா ?

(இ) ஆம எனில், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்படும் மானியத் தொகை அளவு வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ)—மதுரை -காமராசர் பல்கலைக் கழகத்திற்கு 1980-81ம் ஆண்டு வரை மொத்த மான்யமாக ரூ. 18.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. மொத்த மானியம் ஆண்டு ஒன்றுக்கு இது ரூ. 27.00 இலட்சமாக 1981-82-லிருந்து உயர்த்தப்பட்டது. இதுதவிர, 1981-82ல் ரூ. 3,91,320, 1982-83ல் ரூ. 17,46,724ம் தனித்தனி திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

(இ) அந்தந்த பல்கலைக் கழகத்தின் தேவை மற்றும் நிதி வசதிக்கேற்ப மானியம் வழங்கப்படுவதால் ஒன்றுக்கொன்று ஒப்பிடுதல் முடியாது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் வளர்ச்சியிலே முன்னேறிக் கொண்டிருப்பதால் இப்போது கொடுத்து வரும் உதவித் தொகை போதுமானது அல்ல என்று சொல்கிறார்கள் அதனுடைய வளர்ச்சிக்குத் தக்கவாறு உதவி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS